# மயிலாடுதுறை நகராட்சி

**2018–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 27 –ஆம் தேதி வியாழக்கிழமை**
**மாலை 3.30 மணிக்கு நடைபெற்ற அவசரக்கூட்ட நடவடிக்கைகள்.**
முன்னிலை:– திரு. பி.கிருஷ்ணமூர்த்தி, எம்.ஏ.,எம்.ஃபில்.,
தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையர்
மயிலாடுதுறை நகராட்சி

மயிலாடுதுறை
நாள்: 24.12.2018

தனி அலுவலர் / ஆணையர்
மயிலாடுதுறை நகராட்சி

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| **27.12.2018** | **1)** இந்நகராட்சிக்கு வரப்பெறும் சொத்து வரி பெயர் மாற்ற விண்ணப்பங்களுக்கு கீழ்கண்டவாறு ஆய்வுக்கட்டணம் வசூல் செய்ய மேல் நடவடிக்கை தொடரவும், தொடர்பான விளம்பர செலவினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br>1. ஆர்.சி.சி. கட்டிடம் ஒரு வரிவிதிப்பிற்கு ரூ.300/–<br>2. ஓட்டு கட்டிடம் ஒரு வரிவிதிப்பிற்கு ரூ.200/–<br>3. கூரை வீடு ரூ.100/–<br>அலுவலககுறிப்பு: நிர்வாக செலவினத்தை ஈடுசெய்யும் பொருட்டு மேற்கண்ட கட்டணம் 01.01.2019–ம் தேதி முதல் அமுல்படுத்த மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். | **தீர்மான எண்:457**<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 2) மயிலாடுதுறை நகராட்சி பாதாள சாக்கடை திட்டத்தில் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கு M/S Anchor Ceramics Pvt Ltd., Chennai நிறுவனத்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.388, நாள். 23.08.2018ன்படி மூன்று மாதங்களுக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள வேலை உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளப்பட்டது. தற்போது நவம்பர்-2018ம் மாதத்துடன் பணிக்காலம் முடிவடைவதாலும், இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கு மூன்றாண்டுகளுக்கு ரூ.331.79 லட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தம் கோர நகராட்சி நிர்வாக ஆணையரக ஒப்புதல் பெற காலதாமதம் ஏற்படுவதாலும் மேற்படி பணியின் அவசியம் மற்றும் நிர்வாக நலன் கருதி மேலும் மூன்று மாதங்கள் டிசம்பர் 2018 முதல் பிப்ரவரி 2019ம் மாதம் வரை அதே விலை விகிதத்தில் அதே நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி பணியினை பாதாள சாக்கடை நிதியின் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண். 7724/99/இ1 | **தீர்மான எண்:458**<br>அனுமதிக்கப்பட்டது |
| | 3) மயிலாடுதுறை நகராட்சி குடிநீர் திட்ட நிதி 2018-2019ன் கீழ் நகராட்சியின் பொது மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்கிடும் பொருட்டு Sodium Hypo Chloride ஒரு வருட காலத்திற்கு (01.09.2018 முதல் 31.08.2019 வரை) வாங்கிட தேவையான உத்தேச மதிப்பீடு ரூ.10,00,000/- (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) ஆகும். இதனை நகராட்சியின் குடிநீர் திட்ட நிதி 2018-2019ல் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி பணிக்கு அவசர அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோருவதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண். /2018/இ1 | **தீர்மான எண்:459**<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **4)** மயிலாடுதுறை நகராட்சி பொறியியல் பிரிவு பராமரிப்பில் உள்ள TN.51.C.3108 எண்ணுள்ள கழிவு நீர் லாரியின் PTO சரிவர இயங்காததால் அதனை சீர் செய்திட தேவையான உத்தேச மதிப்பீடு ரூ.18800/- (ரூபாய் பதினெட்டாயிரத்து எண்ணூறு மட்டும்) ஆகும். இதனை நகராட்சியின் குடிநீர் திட்ட நிதி 2018-2019ல் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி பணிக்கு மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோருவதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண். 5464/2018/இ1 | **தீர்மான எண்:460**<br>அனுமதிக்கப்பட்டது |
| | **5)** நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண்.194396/2017/P3-ன்படியும், ஆய்வுக்கூட்ட அறிவுரையின்படியும், இந்நகராட்சியின் பல்வேறு பிரிவுகளின் நடவடிக்கைகளை ஆணையர் அவரது இருக்கையில் இருந்தவாறே கவனிக்கவும் திருட்டு சம்பவங்கள் மற்றும் குற்ற சம்பவங்கள் ஏதும் நிகழாவண்ணம் கண்காணிப்பதற்காக இவ்வலுவலக வளாகத்தில் உள்ள அனைத்து பிரிவுகளுக்கும் Digital Camera மூலம் இணைப்பதற்கும் ஏற்கனவே பயன்படுத்தப்பட்டு வருகின்ற CCTV Camera க்களின் Resolution குறைவாக உள்ளதால் தெளிவான பதிவுகள் கிடைப்பதில்லை. எனவே அவற்றினை மாற்றம் செய்து புதிய Digital cameraக்கான HD or 4K தொழில்நுட்பத்தில் மாற்றம் செய்து புதிய Web server வாங்கி புதிய 55 TCL TV ஆணையர் அறையில் பொருத்தி கண்காணிக்க ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 3.00 லட்சம் (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) ஆகும். இதனை நகராட்சியின் வருவாய் நிதி 2018–2019ன் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண். /2018/இ1 | **தீர்மான எண்:461**<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **6)** நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண்.194396/2017/P3-ன்படியும், ஆய்வுக்கூட்ட அறிவுரையின்படியும், இந்நகராட்சி பணியாளர்களின் வருகை பதிவேட்டினை கண்காணிக்கும் பொருட்டு, இவ்வலுவலக அனைத்து பிரிவு ஊழியர்களின் வருகை பதிவேட்டினை (பொது பிரிவு, பொறியியல் பிரிவு, பொது சுகாதார பிரிவில் 5 பிரிவுகள் உட்பட) Bio-Matric Device மூலம் கண்காணிப்பதற்கு ஏதுவாக அனைத்து பிரிவுகளுக்கும் Bio- Matric Device பயன்படுத்த ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 4.00 லட்சம் (ரூபாய் நான்கு லட்சம் மட்டும்) ஆகும். இதனை நகராட்சியின் வருவாய் நிதி 2018–2019ன் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். /2018/இ1 | **தீர்மான எண்:462**<br>அனுமதிக்கப்பட்டது |
| | **7)** இந்நகராட்சியில் பயன்படுத்தப்பட்டு வரும் கணிப்பொறிகள் பழுதடைந்து உள்ளதாலும், தட்டச்சு பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் கணிப்பொறிகள் மிகவும் பழுதடைந்து உள்ளதால் உடனுக்குடன் வேலை செய்வது மிகவும் கடினமாக உள்ளது. எனவே இரண்டு தட்டச்சர்களுக்கும் புதியதாக இரண்டு கணிப்பொறிகளும் மற்றும் நில அளவை பிரிவு முழுவதும் கணிப்பொறி மயமாக்கப்பட்டுவிட்டதால் அவர்கள் பயன்படுத்துவதற்கு ஒரு கணிப்பொறி மற்றும் பிரிண்டரும் மேலும் பிற பிரிவுகளுக்கு என இரண்டு கணிப்பொறிகள் சேர்த்து 1) ஐந்து கணிப்பொறி, 2) மூன்று பிரிண்டர்கள் மற்றும் 3) இரண்டு Dot Matrix பிரிண்டர்கள் ஆகியவை வாங்கிட தேவையான மதிப்பீடு ரூ. 5.00 லட்சம் (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) ஆகும். இதனை நகராட்சியின் வருவாய் நிதி 2018–2019ன் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். /2018/இ1 | **தீர்மான எண்:463**<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **8)** நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண்.194396/2017/P3-ன்படியும், ஆய்வுக்கூட்ட அறிவுரையின்படி மயிலாடுதுறை நகராட்சி பொறியியல் பிரிவு மற்றும் பொது சுகாதாரப்பிரிவுகளின்கீழ் பராமரிக்கப்பட்டு வரும் வாகனங்களான,<br>1. ஈப்பு வாகனங்கள் – 3 எண்ணிக்கை<br>2. கழிவுநீர் உறிஞ்சும் வாகனம் –1 எண்ணிக்கை<br>3. Jet rodding வாகனம் –1 எண்ணிக்கை<br>4. JCB –1 எண்ணிக்கை<br>5. குடிநீர் லாரி –1 எண்ணிக்கை<br><u>சுகாதாரப்பிரிவு</u><br>1. Dumper placer –3 எண்ணிக்கை<br>2. Tipper tractor –3 எண்ணிக்கை<br>3. Tipper tractor –2 எண்ணிக்கை<br>4. LCV –6 எண்ணிக்கை<br>5. BOV –18 எண்ணிக்கை<br>ஆகிய வாகனங்களின் அன்றாட நடவடிக்கைகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள ஏதுவாக GPS Tracking device வைத்திட தேவையான உத்தேச மதிப்பீடு ரூ.7,53,000.00 (ரூபாய் ஏழுலட்சத்து ஐம்பத்தி மூன்றாயிரம் மட்டும்) ஆகும். இதனை நகராட்சியின் பொது நிதி 2018–2019–ல் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 2018/இ1. | **தீர்மான எண்:464**<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **9)** இந்நகராட்சிக்கு 2018-19ம் ஆண்டிற்கு சொத்துவரி தீவிர வசூல் பணியில் நகர் முழுவதும் உள்ள 1 முதல் 36 வார்டுகளில் உள்ள தெருக்களில் பொதுமக்கள் அறியும் வண்ணம் Chariman Jeep மற்றும் பொறியியல் பிரிவு வாகனம் ஆகிய இரண்டு வாகனத்தில் ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செய்வதற்கு புதியதாக அதிக Sound-வுடன்கூடிய ஒலிபெருக்கி, ஆம்பிலிபையர், மைக், பென்டிரைவர், அலுவலகத்திற்கு தேவையான Stand, மைக்செட் மற்றும் ஒலிபெருக்கி சம்மந்தப்பட்ட உபகரணங்கள் வாங்குவதற்கும் மற்றும் தேவையான வசதிகள் செய்து பணி மேற்கொள்வதற்கும் ஆகும் உத்தேச விலைப்புள்ளி ரூ.52,100/-(ரூபாய் ஐம்பத்தி இரண்டாயிரத்து நூறு மட்டும்). இதனை நகராட்சியின் பொது நிதி 2018-2019ல் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண். /2018/இ1 | **தீர்மான எண்:465**<br>அனுமதிக்கப்பட்டது |
| | **10)** மயிலாடுதுறை நகராட்சி பகுதிகளில் கார்பரேட் நிறுவனங்களின் சமூக கூட்டாண்மை பொறுப்பு நிதி (CSR Fund) பெற்று குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து பராமரிப்பு பணி மேற்கொள்ள விருப்பம் உள்ள நிறுவனங்களிடமிருந்து 17.10.2018ல் விருப்ப கருத்துரு கோரப்பட்டதில் M/s Dharana Infrastructure projects private ltd, Chennai நிறுவனத்தினடமிருந்து விருப்ப கருத்துரு வரப்பெற்றுள்ளது.<br><br>மேற்படி பணிக்கு ஒப்பந்த படிவத்தில் Public Private Partnership modeல் பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதாவது, ஒப்பந்த படிவத்தில் நிறுவனம் தங்கள் சொந்த செலவில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து பத்து வருடங்களுக்கு பராமரிப்பு மேற்கொள்ளவே ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது.<br>இதற்கு M/s Dharana Infrastructure projects private ltd, Chennai நிறுவனம் தங்கள் சொந்த செலவில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க விருப்ப கருத்துரு கொடுத்துள்ளது. மேலும் (EOI) கருத்துருக்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளின்படி பணியினை மேற்கொள்ள ஒப்புதல் அளித்துள்ளது.<br>1. மாதாந்திர மின்சார கட்டணம் அந்நிறுவனமே செலுத்தப்பட வேண்டும்<br>2. குடிநீர் தரத்தை உறுதி செய்து மக்களுக்கு விநியோகம் செய்ய வேண்டும்.<br>3. இத்திட்டத்தின் மூலம் பயன்பெறும் பயனாளிகளுக்கு E-Cards அந்நிறுவனமே வழங்கி பராமரிக்க வேண்டும்.<br>4. 20 லிட்டர் கொள்கலன் (Can) ரூ.6.90 என விநியோகிக்கும் போது கேன் ஒன்றுக்கு ரூ.1.00 நகராட்சிக்கு கட்டணமாக செலுத்த வேண்டும்.<br>5. 20 லிட்டர் கொள்கலன் (Can) ரூ.20.00 என வாடிக்கையாளரின் வீட்டிற்கே சென்று விநியோகிக்கும் போது கேன் ஒன்றுக்கு ரூ.2.00 நகராட்சிக்கு கட்டணமாக செலுத்த வேண்டும். | **தீர்மான எண்:466**<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 6. 1 லிட்டர் குளிரூட்டப்பட்ட நீர் அல்லது குளிரூட்டப்படாத நீர் என விநியோகிக்கும் போது ரூ.0.10 நகராட்சிக்கு கட்டணமாக செலுத்த வேண்டும்.<br>7. திட்டம் செயல்படுத்திய 10 ஆண்டுகளுக்கு பின்பு குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை நல்ல முறையில் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட வேண்டும்.<br>8. நிறுவனம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க ஒதுக்கீடு செய்த இடத்திற்கு எவ்வித முன்னுரிமையும் கோர இயலாது.<br>9. திட்டம் செயல்படுத்தும் போது பொது மக்களிடமிருந்து புகார்கள் பெறப்பட்டால் இத்திட்டத்தை இரத்து செய்ய மயிலாடுதுறை நகராட்சி ஆணையருக்கு முழு அதிகாரம் உண்டு.<br>10. பொது மக்களுக்கு மட்டுமே இத்திட்டத்தின் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட வேண்டும். தொழிற்சாலைகள் மற்றும் உணவு விடுதிகளுக்காக குடிநீர் விநியோகம் செய்ய கூடாது.<br>எனவே, மேற்கண்ட நிபந்தனைகளின்படி M/s Dharana Infrastructure projects private ltd, Chennai நிறுவனம் இந்நகராட்சியின் 5 இடங்களில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்துக்கொள்ள மன்றம் ஏற்கலாம்.<br>அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம்<br>ந.க.எண்: 4377 /2018/இ1 | |
| | **11)** மயிலாடுதுறை நகராட்சி பகுதிகளில் 5 இடங்களில் கார்பரேட் நிறுவனங்களின் சமூக கூட்டாண்மை பொறுப்பு நிதி (CSR Fund) பெற்று குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து பராமரிப்பு பணி மேற்கொள்ள விருப்பம் உள்ள நிறுவனங்களிடமிருந்து 17.10.2018ல் விருப்ப கருத்துரு கோரப்பட்டதில் M/s Dharana Infrastructure projects private ltd, Chennai நிறுவனத்தினடமிருந்து விருப்ப கருத்துரு வரப்பெற்றுள்ளது.<br>மேற்படி பணிக்கு ஒப்பந்த படிவத்தில் Public Private Partnership modeல் பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதாவது, ஒப்பந்த படிவத்தில் நிறுவனம் தங்கள் சொந்த செலவில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து பத்து வருடங்களுக்கு பராமரிப்பு மேற்கொள்ளவே ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது.<br>இதற்கு M/s Dharana Infrastructure projects private ltd, Chennai நிறுவனம் தங்கள் சொந்த செலவில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க விருப்ப கருத்துரு கொடுத்துள்ளது. மேலும் (EOI) கருத்துருக்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளின்படி பணியினை மேற்கொள்ள ஒப்புதல் அளித்துள்ளது. | **தீர்மான எண்:467**<br>அனுமதிக்கப்பட்டது |

1. மாதாந்திர மின்சார கட்டணம் அந்நிறுவனமே செலுத்தப்பட வேண்டும்
2. குடிநீர் தரத்தை உறுதி செய்து மக்களுக்கு விநியோகம் செய்ய வேண்டும்.
3. இத்திட்டத்தின் மூலம் பயன்பெறும் பயனாளிகளுக்கு E-Cards அந்நிறுவனமே வழங்கி பராமரிக்க வேண்டும்.
4. 20 லிட்டர் கொள்கலன் (Can) ரூ.6.90 என விநியோகிக்கும் போது கேன் ஒன்றுக்கு ரூ.1.00 நகராட்சிக்கு கட்டணமாக செலுத்த வேண்டும்.
5. 20 லிட்டர் கொள்கலன் (Can)ரூ.20.00 என வாடிக்கையாளரின் வீட்டிற்கே சென்று விநியோகிக்கும் போது கேன் ஒன்றுக்கு ரூ.2.00 நகராட்சிக்கு கட்டணமாக செலுத்த வேண்டும்.
6. 1 லிட்டர் குளிரூட்டப்பட்ட நீர் அல்லது குளிரூட்டப்படாத நீர் என விநியோகிக்கும் போது ரூ.0.10 நகராட்சிக்கு கட்டணமாக செலுத்த வேண்டும்.
7. திட்டம் செயல்படுத்திய 10 ஆண்டுகளுக்கு பின்பு குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை நல்ல முறையில் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட வேண்டும்.
8. நிறுவனம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க ஒதுக்கீடு செய்த இடத்திற்கு எவ்வித முன்னுரிமையும் கோர இயலாது.
9. திட்டம் செயல்படுத்தும் போது பொது மக்களிடமிருந்து புகார்கள் பெறப்பட்டால் இத்திட்டத்தை இரத்து செய்ய மயிலாடுதுறை நகராட்சி ஆணையருக்கு முழு அதிகாரம் உண்டு.
10. பொது மக்களுக்கு மட்டுமே இத்திட்டத்தின் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட வேண்டும். தொழிற்சாலைகள் மற்றும் உணவு விடுதிகளுக்காக குடிநீர் விநியோகம் செய்ய கூடாது.

எனவே, மேற்கண்ட நிபந்தனைகளின்படி M/s Dharana Infrastructure projects private ltd, Chennai நிறுவனம் இந்நகராட்சியின் 31 இடங்களில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்துக்கொள்ள மன்றம் ஏற்கலாம்.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம்

ந.க.எண்: 4377 /2018/இ1

| | | |
|---|---|---|
| | **12)** மயிலாடுதுறை நகராட்சி அலுவலக ஆணையர் அறையில் உள்ள குளிர் சாதனப் பெட்டி பழுதாகிவிட்டதாலும் சரி செய்ய இயலாத நிலையில் இருப்பதாலும் மேற்படி சாதனம் கொள்முதல் செய்து 8 ஆண்டுகள் ஆனதாலும் புதியதாக குளிர்சாதனப்பெட்டி வாங்கி பொருத்தும் பணிக்கு ஆகும் உத்தேச செலவீனம் ரூ.39,000/- (ரூபாய் முப்பத்தி ஒன்பதாயிரம் மட்டும்) ஆகும். இச்செலவீனத்தை நகராட்சி வருவாய் நிதி 2018-2019லிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: 1) அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி உள்ளுர் விலைப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண். 5536/2018/இ1 | **தீர்மான எண்:468**<br>அனுமதிக்கப்பட்டது |
| | **13)** நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர் கடித எண். 23656/2018/DO2 நாள்:13.12.2018ல இந்நகராட்சி பாதாள சாக்கடை இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கு ஒப்புதல் வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கு சமர்பிக்கப்படுகிறது.<br><br>மேற்படி பணியின் அவசியம் கருதி மாநில அளவில் ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>அலுவலககுறிப்பு: 1) பதிவு செய்யலாம்.<br>2) மாநில அளவில் ஒப்பந்தப்புள்ளி கோரியதின் செலவீனத்தை பாதாள சாக்கடை திட்ட நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண். 7724/99/இ1 | **தீர்மான எண்:469**<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 14) மயிலாடுதுறை நகராட்சி கழிவு நீர் உறிஞ்சு வாகனம் எண்.TN.51.C.3108-ஐ தகுதி சான்று பெற தக்க வகையில் பழுது நீக்கம் செய்திட TATA MOTORS நிறுவனமான TATA MOTORS VST, Koondur, Cuddalore அவர்களிடம் பட்டியல் கோரப்பட்டதில் ரூ.142750/-(தொழிலாளர் கூலி மற்றும் உதிரிபாகங்கள் GST தவிர) என பட்டியல் வரப் பெற்றுள்ளது. மேற்படி வாகனத்தை பழுது நீக்கம் செய்து தகுதி சான்று பெறுவது இன்றியமையாதது ஆகும். மேலும் மேற்படி வாகனத்தை கொண்டு தான் இந்நகராட்சி பாதாள சாக்கடை பணியில் ஏற்படும் அடைப்புகள், தேங்கி நிற்கும் கழிவுநீர்களை தினசரி அப்புறப்படுத்த இயலும். மேலும் இவ்வாகனம் தினசரி கழிவு நீரில் பயன்படுத்துவதால் நீரில் உள்ள அமில தன்மையாலும் இவ்வாகனம் பழுது ஏற்பட்டுள்ளது. எனவே மேற்படி பணிக்கு ஆகும் உத்தேச செலவீனம் GST மற்றும் Labour charge உள்பட ரூ.1,86,000/-(ரூபாய் ஒரு லட்சத்தி எண்பத்தி ஆறாயிரம் மட்டும்) – ஐ இந்நகராட்சி பாதாள சாக்கடை திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: 1) அனுமதிக்கலாம்.<br><br>2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி TATA MOTORSVST, Koondur, Cuddalore அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண். 4608/2018/இ1 | **தீர்மான எண்:470**<br><br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **15)** மயிலாடுதுறை நகராட்சி அலுவலக ஆணையர் அறையில் பழுதான குளிர்சாதனப்பெட்டியை மாற்றி புதியதாக குளிர்சாதனப் பெட்டி வாங்கி பொருத்தும் பணிக்கு **10.12.2018**ம் தேதி கோரிய உள்ளுர் விலைப்புள்ளியில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. | **தீர்மான எண்:471**<br>அனுமதிக்கப்பட்டது |

| வ. எண் | வேலையின் விபரம் | விலைப்புள்ளி மதிப்பு ரூ. | விலைப்புள்ளி அளித்துள்ள இரண்டு நிறுவனத்தாரர்கள் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டைவிட குறைவு/ மதிப்பீட்டைவிட அதிகம் | குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தாரர் பெயர் திருவாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| வருவாய் நிதி | | | | | |
| 1. | மயிலாடுதுறை நகராட்சி அலுவலக ஆணையர் பழுதான குளிர்சாதனப் பெட்டியை புதியதாக மாற்றி தரும் பணி (1.5 Ton கொள்ளளவு) | **39,000/-** | Airtech Engineering, Mayiladuthurai. | **ரூ.38500/–** | Airtech Engineering, Mayiladuthurai. |
| | | | Service Point, Mayiladuthurai. | **ரூ. 40000/–** | |
| | | | Nasion cool Point, Mayiladuthurai | **ரூ. 42800/–** | |

மேற்கண்டபடி வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் அளித்துள்ள Airtech Engineering, Mayiladuthurai நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.** 5536/2018/இ1

| | | |
|---|---|---|
| | **16)** மயிலாடுதுறை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு உரிமையாளர்களிடமிருந்து தானமாக பத்திரம் மூலம் பதிவு செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்ட பூங்காக்கள், சிறுவர் விளையாடுமிடங்கள் மற்றும் திறவிடம் போன்ற இடங்களை தமிழ்நாடு பூங்கா, விளையாடுமிடம் மற்றும் திறவிடங்கள் (பராமரிப்பு மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம் 1959—ன்கீழ் அரசிதழ் மூலம் பிரசுரம் செய்து அறிவிக்கை வெளியிடப்படவேண்டும். பிரசுரம் செய்வதற்கு ஏதுவாக பட்டியல் தயாரித்து சமர்பித்திட கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம் ந.க.எண்.12129/2017/டிபி3, நாள். 08.06.2017 கடிதம் வாயிலாக கோரப்பட்டுள்ளது. அதன்படி தயார் செய்யப்பட்ட பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், பிரசுரம் செய்திட அனுமதிக்க ஏற்கனவே தீர்மான எண்.119. நாள்.09.06.2017—ல் அனுமதிக்கப்பட்டதை ரத்து செய்து நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அறிவுரையின்படி திருத்தம் செய்யப்பட்ட பூங்காக்கள், சிறுவர் விளையாடுமிடம் மற்றும் திறவிடங்கள் தயார் செய்யப்பட்ட பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் பிரசும் செய்திட அனுமதித்தும் தீர்மானிக்கலாம்.<br><br>அலுவலகக்குறிப்பு: 1. தமிழ்நாடு பூங்கா, விளையாடுமிடம் மற்றும் திறவிடங்கள் (பராமரிப்பு மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம் 1959—ன்கீழ் அரசிதழ் மூலம் பிரசுரம் செய்து வெளியிடலாம்.<br><br>2. 54 பூங்காக்கள், 6 சிறுவர் விளையாடும் இடம், இரண்டு திறவிடம் அடங்கிய பட்டியல்படி அனுமதித்து மன்றம் தீர்மானிக்கலாம்.<br><br>ந.க.எண். 3473/2017/எப்1 | **தீர்மான எண்:472**<br><br>அனுமதிக்கப்பட்டது |

**17)** இந்நகராட்சி பொது நிதியின்கீழ் கீழ்கண்ட பணியினை செய்திட 06.10.2018 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை தனிஅலுவலரின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | விலைப்புள்ளி மதிப்பு ரூ. | விலைப்புள்ளி அளித்துள்ள இரண்டு நிறுவனத்தாரர்கள் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டைவிட குறைவு/ மதிப்பீட்டைவிட அதிகம் | குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தாரர் பெயர் திருவாளர்கள் |
|---|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** | **6** |
| பொது நிதி | | | | | |
| 1. | மயிலாடுதுறை நகராட்சி துலாகட்டத்தில் அந்திம புஷ்கர விழாவிற்கு Electrical arrangement (Hire basis) செய்யும் பணி. | **76,000/-** | M/S Gemini Sounds, 38, Anna Street, Koranad, Mayiladuthurai. | **ரூ.75600.00/–** குறைவு | M/S Gemini Sounds, 38, Anna Street, Koranad, Mayiladuthurai. |
| | | | G.Natarajan, Electrician, Pookadai Street, Koranad, Mayiladuthurai. | **ரூ. 78600.00/–** அதிகம் | |
| | | | G.Srinivasan, Electrician, Punugeeswarar sannathi Street, Koranad, Mayiladuthurai. | **ரூ. 83850.00/–** அதிகம் | |

<u>அலுவலககுறிப்பு</u>

1. பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: 6ல் குறிப்பிட்டுள்ள குறைந்த விலைப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள நிறுவனத்தாரரின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 4795/2018/இ1**

**தீர்மான எண்:473**

அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| | **18)** இந்நகராட்சி பொது நிதியின்கீழ் கீழ்கண்ட பணியினை செய்திட 26.12.2018 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை தனிஅலுவலரின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்:474**<br>அனுமதிக்கப்பட்டது |

| வ. எண் | வேலையின் விபரம் | விலைப்புள்ளி மதிப்பு ரூ. | விலைப்புள்ளி அளித்துள்ள இரண்டு நிறுவனத்தாரர்கள் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டைவிட குறைவு/ மதிப்பீட்டைவிட அதிகம் | குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தாரர் பெயர் திருவாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| பொது நிதி | | | | | |
| 1. | இந்நகராட்சி பொது மக்களுக்கு வரி வசூல் தொடர்பான விளம்பரம் செய்திட ஏதுவாக பொறியியல் பிரிவு வாகனம் மற்றும் Charman Jeep க்கு ஒலிபெருக்கி, ஆம்பிபையர், மைக், பென்டிரைவர் மற்றும் அதன் சம்மந்தப்பட்ட உபகரணங்கள் வாங்கி பொருத்தும் பணி. | **52,000/-** | M/S Royal Radios, No 16, Hama centre, Pattamangala Street, Mayiladuthurai. | ரூ.52068.00/– அதிகம் | M/S Royal Radios, No 16, Hama centre, Pattamangala Street, Mayiladuthurai. |
| | | | M/S Amirthaa Electronics, No 9, Hama centre, 2nd floor, Pattamangala Street, Mayiladuthurai. | ரூ. 54100.00/– அதிகம் | |
| | | | G.Elanchezhiyan, No.32, Town station south side, Mayiladuthurai. | ரூ. 54610.00/– அதிகம் | |

<u>அலுவலககுறிப்பு</u>

1. பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: 6ல் குறிப்பிட்டுள்ள குறைந்த விலைப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள நிறுவனத்தாரின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.** /2018/இ1

| | | |
|---|---|---|
| | **19)** மயிலாடுதுறை நகராட்சி பொது சுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் (Compost yard) குப்பைகள் நிறைந்து, குப்பை கொட்ட இடமில்லாத காரணத்தினால் தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் துறைமூலம் செயின் டோசர் மூலம் குப்பைகளை சமன்செய்வதற்கு உத்தேச செலவினத்தொகை ரூ.400000/– (நான்குலட்சம்)–ஐ இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.3753/2017/எச்1. | **தீர்மான எண்:475**<br><br>அனுமதிக்கப்பட்டது |